கேள்விக்கான பதிலில் கூட "மெட்ராஸ் ஹாண்ட் கர்சீப்" ஏற்றுமதி பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அது கைக்குட்டை அல்ல ; அது பெண்கள் அதிகமாக உபயோகப்படுத்தக்கூடிய படுதா மாதிரியான வேட்டி. ஆப்பிரிக்க நாடுகளில் அதிகமாக உபயோகப்படுத்தி வந்தார்கள். அதற்கு டிமாண்ட் இருக்கிறதா ? மத்தியக் கிழக்கு நாடுகளுக்கும், ஆப்பிரிக்க நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறதா ? இல்லையென்றால் என்ன காரணம் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மெட்றாஸ் ஹாண்ட் கர்சிபுக்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. இது பற்றிய விவரங்கள் இல்லை.

Copper deposits in Tiruvannamalai area

***284 *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state :**

(*a*) whether it is a fact that the Bharat Gold Mines are undertaking any exploratory mining for Copper finds near Tiruvannamalai in this State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்திய அரசின் நிறுவனமாகிய பாரத் தங்கச் சுரங்கம் (வரையறுக்கப் பெற்றது) தென்னாற்காடு மாவட்டத்தில் கிடைக்கும் தாமிர கனிப் பொருட்களைக் கண்டுபிடித்து ஆய்வு நடத்த உத்தேசித்துள்ளது. மேற்கண்ட கனிப் பொருட்களின் மாதிரிகள் சேகரித்து, அவற்றை இலாபகரமான முறையில் வெட்டி எடுக்கும் சாத்தியக் கூறுகளையும் அவற்றை மேம்பாடடையச் செய்ய ஆய்வு நடத்துதலும் இந்த ஆய்வு வேலையுள் அடங்கும். இச் சுரங்கத்தின் அபிவிருத்தி இந்த ஆய்வு வேலைகளின் முடிவைப் பொறுத்து அமையும்.

திரு. என். டெண்ணிஸ் : அந்த ஆய்வு வேலை எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய அரசாங்கத்தின் நிறுவனம் விரைவில் செய்யும் என்று நம்புகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தப் படிவம் எவ்வளவு இருக்கிறது? ஒரு தொழிலுக்கு உபயோகப்படுத்திக் கொள்வதற்கேற்றவாறு சாத்தியக் கூறு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழிலைத் தொடங்க வாய்ப்பு இருக்கிறதா என்பதைப் பரிசீலிக்கும்படி மத்திய அரசு நிறுவனத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இந்தப் படிவம் கிடைக்குமென்று எதிர் பார்ப்பது ஒன்றரை மிலியன் டன்கள் ஆகும்.

1974 மார்ச் 4]

THIRUMATHI T. N. ANANDANAYAKI : It was told that there were iron ore deposits in Tiruvannamalai area. Is it a fact ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : திருவண்ணாமலையிலுள்ள மாமண்டூரில் தாமிரக் கனிப் பொருட்கள் கிடைக்கின்றன. அயர்ன் ஓர் கிடைப்பது வேறு ஒரு மலைப் பகுதியில். அதைப் பற்றி ஜப்பான் நிபுணர்கள் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். மத்திய அரசாங்க உதவியோடு யு. என். டி. பி. மூலமாகவும் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது.

குப்பல் திரு. கே. எஸ். ராமகிருஷ்ணன் : தங்கத்தின் விலை கிறு கிறு என்று அதிகமாகி ஜனங்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த மைன்ஸ் மூலமாக விலை குறைய வாய்ப்பு இருக்கிறதா? (மணி அடிக்கப்பட்டு திரு. வீராசாமி அழைக்கப்பட்டார்).

திரு. நா. வீராசாமி : தாமிரக் கனிப் பொருள் தென்னார்க்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலையில் அதிகமாக இருக்கிறதென்றும் மத்திய அரசாங்க ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பதாகவும் தெரிகிறது. அதனுடைய ஹெட் குவார்ட்டர்ஸை திருவண்ணாமலையிலேயே வைக்கவும், வெட்டி எடுக்கப்பட்ட பிறகு அதற்கான தொழிற்சாலையை திருவண்ணாமலையிலேயே ஏற்படுத்தவும் மத்திய அரசுக்கு நம்முடைய அரசு சிபார்சு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : திருவண்ணாமலையில் அங்கத்தினர் அவர்கள் அக்கறை கொண்டிருக்கிறார்கள். அது எனக்குப் புரிகிறது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாமண்டூரிலே செம்பு கிடைப்பது பற்றி ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பாகவே பரிசீலிக்கப்பட்டு இந்த மன்றத்திலே பதிலும் சொல்லியிருக்கிறார்கள். அதை வெட்டி எடுத்தால் அன்எகனாமிக்காக இருக்குமென்றும் அதிகச் செலவாகும் என்றும் கூறி மத்திய அரசாங்கத்தினர் பேசாமல் இருந்துவிட்டனர். இடையில் ஜப்பானில் இருந்து ஒரு நிறுவனத்தார் தாங்கள் வெட்டி எடுக்கிறோம், கொலாபரேஷன் செய்து கொள்ளலாம் என்றனர். அதையும் மத்திய அரசாங்கம் தள்ளி விட்டது. மத்திய அரசாங்கம் மேல் நடவடிக்கை எடுக்கும் வகையில் கொலாபரேஷன் ஏற்படுத்தி விரைவில் மாமண்டூரில் இருக்கும் செம்பை எடுக்க முயற்சி செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது அந்தக் கட்டம் எல்லாம் முடிவுற்று பாரத் கோல்டு மைன்ஸ் என்ற மத்திய அரசாங்க நிறுவனம் இதைச் செய்வதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தக் காரியம் விரைவில் நடைபெறும் என்று எதிர்பார்க்கலாம்.